# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2022

ஆண்டு: 10 திகதி: 26-11-2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 25 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 10 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கோபம் சிறுவர்களையும் பெரியவர்களையும் ஆட்டிப்படைக்கிறது. வாய் பேசத் தெரியாத குழந்தைகளும் கதறி அழுது தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஏற்றுக்கொள்ள முடியாத சூழலினாலும், செய்கையினாலுமே ஒருவருக்கு ஆவேசம் உண்டாகிறது. அது சிறு எரிச்சலாகத் தோன்றி உடனே மறைந்து விடலாம், அல்லது எரிமலை போல் வெடித்து உள்ளத்தில் அகலா வெறுப்பை உண்டாக்கி விடலாம். **ரேமண்ட் நோவாகோ** என்னும் அறிஞர் கோபத்தை; உடலைப் பாதிக்கக்கூடியது, மனத்தைப் பாதிக்கக்கூடியது, நடத்தையைப் பாதிக்கக்கூடியது என மூன்று வகையாகப் பிரிக்கிறார்.

கோபம் ஓர் ஆக்கிரமிப்பு உணர்ச்சி. அதற்கு ஒருவர் அடிமையாகும் போது தான் என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் ஆபத்து விளைவிக்கும் செயல்களில் கூட ஈடுபடுவார். அச்சுறுத்தும் வெளிப்புறச் சக்தியுடன் போராடவே நம் மூளை கோபத்தை கருவியாகப் பயன்படுத்துகிறது என்று அறிவியல் வல்லுனர்கள் நம்புகின்றனர். கோபத்தின் வெளிப்பாட்டால் நம் பேச்சு மொழி மாறுகிறது. இரத்த நாளங்கள் இறுகி மூர்க்கத்தனமான செயல்களைச் செய்கின்றோம். உடலை பெரிதாக்க முயன்று, பற்களைக் கடித்து, ஒலியைப் பெருக்கி நம் உடலின் வலிமையை எதிரிக்குக் காட்டுகிறோம். இவற்றை மானிடர்கள் மட்டுமல்ல, விலங்குகளும் செய்கின்றன!

சிலர் கோபமுள்ள இடத்தில்தான் குணம் இருக்கும், அடிக்கிற கைதான் அணைக்கும் என்பார்கள். இத்தகைய கோபம் நம்மீது உள்ள அக்கறையால் வருவது. அன்புக்குரியவர்கள் நெறி மாறிப் போகும்போது அவர்களை எச்சரித்து நல்வழிக்குத் திசைதிருப்ப இவர்கள் நம்மை கோபித்துக் கொள்வார்கள். தந்தை மகன் மீது கொள்ளும் கோபம், ஆசிரியர் மாணவன் மீது கொள்ளும் கோபம், அக்கா தம்பியிடம் காட்டும் கோபம், இவையாவும் நல்லெண்ணத்தால் ஏற்படும் கோபங்களே. இவை நீண்ட காலத்திற்கு நிலைக்காது. நாம் நம்மை திருத்திக் கொள்ளும்போது இக்கோபம் பஞ்சாய்ப் பறந்து விடும்.

மனிதன் அனுபவபூர்வமான வாழ்க்கையை நடத்த கோபம் அவனுக்கு முதன்மையான வாய்ப்பை அளிக்கிறது என்பது உளவியலாளர்கள் கருத்து. சிலர் கோபத்தின் விளைவை விரைவில் உணர்ந்து தங்களை மாற்றிக் கொள்வார்கள். ஆனால் கட்டுப்படுத்த முடியாத கோபம் சமூக அளவில் எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும். இதை உணரும் போது ஒருவர் தன் வாழ்நாளில் பாதியையோ அல்லது முக்கால்வாசியையோ இழந்திருப்பார். சிலர் குடும்ப உறவு, சொந்தபந்தம், நண்பர்கள், அன்புக்குரியவர்கள் என்று அனைவரையும் புறக்கணித்து இருப்பார். கோபத்திற்கு இந்த விலை அவசியம் இல்லை. கோபம் கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றே ஆகும்.

கோபம் வரும்போது வன்முறை நிகழாமல் இருக்க அவ்விடத்தை விட்டு அகன்று தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளுதல் நல்லது. அது மனம் அமைதி நிலையைப் பெற்று சிந்திக்க உதவும். யோகாசனம் போன்ற மனக் கட்டுப்பாட்டுப் பயிற்சியும் கோபத்தை அடக்க வல்லது. அது மனதை ஒருமுகப்படுத்தி நம் சிந்தனை ஆற்றலை பெருக்கும். சிலர் (புலால்) மாமிசம்உண்பவர்களுக்கு கோபம் கட்டில் அடங்காமல் வரும் என்பார்கள். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. எனினும், அதிக காய்கறிகளை உண்பது உடலுக்கு நன்மையையே பயக்கும்.

1. கோபம் ஒருவரை எவ்வாறு ஆட்டிப்படைக்கிறது? (3 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

2. இவற்றை மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும் செய்கின்றன என்ற கூற்றின் மூலம் கட்டுரையாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்து என்ன? (5 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. எத்தகைய கோபம் நீண்ட நாட்களுக்கு நிலைக்காது? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

4. கோபத்திற்கு இந்த விலை அவசியமில்லை என்ற வரியில் ”இந்த விலை” எதனை குறிக்கிறது? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

5. கோபத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

## கடிதம் எழுதுதல் (15 புள்ளிகள்)

உங்கள் குடும்பத்தின் சார்பாக விண்ணப்பக் கடிதம் ஒன்றை 100 சொற்களில் எழுதவும்.

**மாணவர் பரிமாற்று திட்டம் மாணவர் பராமரிப்பில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பம்**

குறிப்பு:

அவுஸ்திரேலிய தமிழ் பாடசாலைகள் ஒருங்கிணைப்புக் குழுவினால் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி ஈழத்திலிருந்தும் தமிழ்நாட்டில் இருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இப்பரிமாற்றத் திட்டத்தில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியா வரும் மாணவர்கள், தாம் இங்கு தங்கியுள்ள காலத்தில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவார்கள்:

- தாம் தங்கியுள்ள அவுஸ்திரேலிய மாநிலத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ளுதல்.
- தாம் வாழும் மாநிலத்திலுள்ள பாடசாலைக்குச் செல்வதன் மூலம் அங்கு நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறையில் உள்ள பொதுவானதும் சிறப்பானதுமான அம்சங்களை அறிந்து கொள்ளல்.
- உள்ளரங்க மற்றும் மைதான விளையாட்டுக்களைத் தெரிந்து கொள்ளல்.
- நகர்ப்புற, நாட்டுப்புற வாழ்க்கை முறைகளின் வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளல்.
- உள்ளூரில் காணப்படும் திரைப்படங்கள், அரங்கேறும் கலை கலாச்சார நிகழ்வுகள் பற்றி அறிதல்.

மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து வரப்படும் மாணவர்களில் ஒருவரை மூன்று மாத காலத்திற்குத் தங்கள் வீட்டில் நல்ல தங்குமிட வசதிகள் கொடுத்து பராமரிக்க விரும்புகின்ற தமிழ்க் குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவுஸ்திரேலியாவில் தமிழ் கற்கும் மாணவர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

<u>கடிதம் அனுப்பவேண்டிய விலாசம்:</u>

தலைவர் தமிழ் பாடசாலைகள் ஒருங்கிணைப்புக் குழு

சிட்னி

நி ச வே 2140

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தலைப்புகளில் 5 வசனங்களுக்குக் குறையாமல் சிறுகுறிப்பு எழுதுக:

1. நெகிழியை (plastic) உபயோகிப்பதால் உள்ள தீமைகள்

2. குற்றாலக் குறவஞ்சி

3. மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள்

| வினா இல | 4 | புள்ளிகள் | 25 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

- நான் அண்மையில் பார்த்து மகிழ்ந்த திரைப்படத்தின் விமர்சனம்
- நீர் மாணவர் குழு பொறுப்பாளராக உள்ளீர்.

  பிரதான பாடசாலைகளில் நடைபெறுவதைப் போல தமிழ் பாடசாலைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட வகுப்புகளில் கல்விச் சுற்றுலாவை அறிமுகப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி நீர் பரிசளிப்பு விழாவில் ஆற்ற இருக்கும் உரையை 180 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

நீர் கேட்ட உரையாடலில் இருந்து பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

**கேட்டுக் கிரகித்தல் -1**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| இவ்வுரைப் பகுதியில் கூறப்படும் இரு அரசர்களின் பெயர்களை குறிப்பிடுக<br>____________________<br>____________________<br>யார் படை பலம் மிக்கவன்?<br>____________________<br>____________________<br>மந்திரி சற்றும் தயங்காமல் என்ன செய்தார்?<br>____________________<br>____________________<br>அழகாபுரி நாட்டு மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது?<br>____________________<br>____________________<br>மந்திரி ஏன் தன்னை மன்னிக்குமாறு கேட்டார்?<br>____________________<br>____________________ | |

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

நீர் கேட்ட உரையாடலில் இருந்து பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

**கேட்டுக் கிரகித்தல் -2**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| எந்த விழாவைப் பற்றி இந்த உரையில் கேட்டீர்கள்?<br>____________________<br>____________________<br><br>மேசை 24 இல் இருப்பவர் யார்?<br>____________________<br>____________________<br><br>மேசை 24 இல் இருப்பவர்களுக்கு இடையில் என்ன இருப்பதாகக் கூறப்படுகிறது?<br>____________________<br>____________________<br><br>மணமகள் அவரைப் பற்றி அறிந்து அவருக்கு என்னசெய்து கொடுத்தார்?<br>____________________<br>____________________<br><br>எத்தனை வருடத்திற்கு பின் தனது நண்பரை சந்திப்பதாக மணமகளின் அம்மா கூறினார்<br>____________________<br>____________________ | |